**STARTING TIME 10.56 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 121/2019**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Gr. II Bench Clerk of this court, on 07.12.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : **முத்து** | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1. நான் தான் முத்து என்பதற்கு ஆதாரம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். என்ன ஆதாரம் கொடுத்துள்ளேன் என்றால், ஆதார் அட்டை, ரேஷன் அட்டை கொடுத்துள்ளேன். எத்தனை வருடங்களாக நான் முனுசாமி பிள்ளை தெருவில் வசித்து வந்தேன் என்றால் 35 வருடங்களாக வசித்து வந்தேன். தற்போது எங்கு வசிக்கிறேன் என்றால், சென்னை தேனாம்பேட்டையில் வசித்து வருகிறேன். எவ்வளவு காலமாக அங்கு வசிக்கிறேன் என்றால் 34 வருடங்களான வசித்து வருகிறேன்.**

**2. நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல என்னை யார் அழைத்து வந்தார் என்றால் ஜெயந்தி அழைத்ததன் பேரில் வந்தேன். எதற்காக சாட்சி சொல்ல வேண்டி அழைத்தார்கள் என்றால் நில தகராறு சம்பந்தமாக அழைத்து வந்தார்.**

**3. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என தெரியுமா என்றால், நிலம் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார், அதற்காக நான் சாட்சி கையெழுத்து செய்துள்ள உயில் சம்மந்தமாக சாட்சியம் அளிக்க**

அழைத்தார். பொதுவாக, நான் ஒரு ஆவணத்தில் கையெழுத்து செய்ய வேண்டும் என்றால், படித்து பாரத்து போடுவேனா அப்படியே போடுவேனா என்றால் படித்து பார்த்து தான் போடுவேன்.

4. அங்கம்மாள் எழுதி வைத்து நான் சாட்சி கையெழுத்து செய்ததாக சொல்லும் உயில் சாசனத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. என்னுடன் மற்றொரு சாட்சி கையெழுத்து யார் செய்தார் என்றால் சுந்தரம் செய்தார். உயில் சாசனத்தை நான் படித்து பார்க்காததால், அதில் உள்ள சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

5. நான் சாட்சி கையெழுத்து செய்த உயில் சாசனத்தில் உள்ள சொத்தின் சர்வே எண் 13/1 என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அங்கம்மாள் குடும்பத்தில் எழுதிய மற்ற ஆவணங்களிலும் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. உயில் எழுதிய மறுநாள் 20.06.1973 ல் வாதியின் தகப்பனாருக்கும் மோகன் என்பவருக்கும் இடையே எழுதி கொள்ளப்பட்ட வா.சா.ஆ–5 பாகப்பிரிவினை பத்திரத்திலும் நான் ஒரு சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரத்தில் வாதி தகப்பனாருக்கு சர்வே எண் 13/1–ல் பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் கிழக்கு மேற்கு 37–1/2, வடக்கு தெற்கு 122 அடி என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7. உயில் சாசனத்திலும், பாகப்பிரிவினை பத்திரத்திலும் சாட்சியாக கையெழுத்து செய்ததை தவிர வேறு எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனவே, அந்த ஆவணங்களில் உள்ள சொத்துக்களில் யார் அனுபவத்தில் உள்ளார்கள், யார் பெயரில் பட்டா உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தசரதன் தான் அனுபவத்தில் உள்ளார். கடைசியாக தசரதனை எப்போது பார்த்தேன் என்றால் ஊருக்கு வரும்போது பார்த்தேன். நான் சாட்சி கையெழுத்து செய்தது தவிர வேறு எந்த விவரமும் தெரியாது என்றும், வாதி கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.**

**ENDING TIME 11.14.A.M.**

G YUVARAJ

Special Sub Judge, Arakkonam
Digitally signed by G YUVARAJ
Date: 2024.12.07 13:11:39 +0530